Registered as a NewsPaper · பக்கங்கள் 04 · விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM · Peoples Daily · மக்கள் தினசரி

நாதம்:- 03 · திருவள்ளுவர் ஆண்டு 2023 · சித்திரை 09 · ( 21 - 04 - 1992 ) · செவ்வாய்க்கிழமை · ஓசை: 63

### பலாலியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்க கோரி அரச அதிபர் தந்தி

பலாலி சிறிலங்கா இராணுவமுகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இளைஞர்களை உடனடியாக விடுதலை செய்யக்கோரி யாழ். அரசாங்க அதிபர் நேற்றுக் கூட்டுப்படைத் தலைமையலுவலகத்திற்கு அவசரத்தந்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார். அண்மையில் கொழும்பு சென்ற அரசாங்க அதிபர் இது தொடர்பாகக் கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டபொழுது ஒரு வாரத்திற்குள் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரில் ஒரு பகுதியினரை விடுதலை செய்வதாக அவர்கள் உறுதியளித்திருந்தனர். (4 ஆம் பக்கம் பார்க்க)

# பெண் புலிகளின் துணிவும் போர்த்திறனும் களம் கண்ட சிங்கள அதிகாரிகள் பாராட்டு

## புலிகளின் பிரமிக்கத்தக்கமனோதிடம்

(கொழும்பு)

"சமீப காலத்தில் விடுதலைப் புலிகள் பெரிய உயிரிழப்பை சந்தித்தபோதும் அவர்களிடம் பிரமிக்கத்தக்க மனோதிடம் இருந்து வருகிறது. யுத்த களத்தில், விடுதலைப் புலிகளிடம் குறிப்பாக பெண் போராளிகளிடம் தீவிர இலட்சிய வேட்கையும், ஆக்கிரோசமாகப் போராடும் துணிவும் காணக் கூடியதாக இருக்கிறது. இந்த அலாதியான போர்த் திறனால் எதிரிகளின் பெருமதிப்பைக்கூட அவர்கள் பெற்றுள்ளார்கள்."

இவ்விதம் போர்க்களத்தில் அனுபவம் பெற்ற சிங்கள இராணுவ அதிகாரிகள் விடுதலைப்புலிகளை பாராட்டியிருப்பதாக கொழும்பு வாராந்த ஆங்கில ஏடு தெரிவித்துள்ளது.

மேலும் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் கிளர்ச்சி எதிர்ப்புநடவடிக்கைகள் கடினமானதாக இருப்பதாகவும், புலிகள் மேற்கொள்ளும் திட (4 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கிரஸ் செயற்குழுவில் மூவர் ராஜினாமா

(டில்லி)

இந்திரா காங்கிரஸ் உயர் மட்ட அமைப்பான செயற்குழுவிலிருந்து பால்ராம் ஜாக்கர், குலாம்நபி ஆஸாத், விஜெய பாஸ்கரரெட்டி ஆகியோர் இராஜினாமாச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் தமது இராஜினாமாக் கடிதங்களை நேற்றுக் காங்கிரஸ் தலைவரும், பிரதம மந்திரியுமான பி.வி. நரசிம்மராவ்விடம் சமர்ப்பித்தனர். செயற்குழுவில் பெண்கள் இடம் பெறாததைக் காரணம் காட்டி இவர்கள் தமது இராஜினாமாவைச் சமர்ப்பித்துள்ளார்கள்.

## யுத்தமுனை அதிகாரிகளுடன் படைத்தளபதிகள் மந்திராலோசனை

(கொழும்பு)

சிறிலங்கா முப்படைகளின் தளபதிகள் தனித்தனியே தத்தமது படையணிகளைச் சேர்ந்த யுத்தமுனையிலுள்ள உயர் அதிகாரிகளுடன் மந்திராலோசனை கலந்து வருவதாகத் தெரிய வருகின்றது.

தற்போதைய களநிலைமைகளை மதிப்பீடு செய்வதும், புதிய திட்டங்களை வகுப்பதும், கட்டுப்படுத்தும் மற்றும் கட்டளையிடும் அமைப்பில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் பற்றி விளக்குவதும் இச்சந்திப்புக்களின் நோக்கம் எனத் தெரியவருகிறது.

வடக்கு, கிழக்குப் பிராந்தியத்தைச் சேர்ந்த யுத்தமுனைகளிலுள்ள இராணுவ அதிகாரிகளுடன் முப்படைத் தளபதிகளும், கடற்படை, விமானப் படை அதிகாரிகளும் தனித்தும், கூட்டாகவும் ஆலோசனைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

கூட்டுப்படைத் தலைமையகத்திடமிருந்த பொறுப்புக்கள் முப்படைத்தளபதிகளுக்கு மாற்றப்பட்ட பின்பு திட்டமிடவும், நடைமுறைப்படுத்தவும் முப்படைத்தளபதிகளும் முனைப்பாகவுள்ளதை இது காட்டுவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் அனுராதபுரத்தில் அமைக்கப்படவிருக்கும் கூட்டுப்படைகளின் முன்னணித் தலைமையகத்திற்குத் களத்தில் கடமையாற்றிய பல அதிகாரிகள் இடமாற்றம்செய்யப்படலாமெனவும் தெரிய வருகின்றது.

## சிங்கள இராணுவத்தினர் மத்தியில் ஆத்திரமும் அதிருப்தியும்

### அதிகார மாற்றத்தின் எதிரொலி

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவக் கட்டமைப்பில் அண்மையில் செய்யப்பட்ட மாற்றங்கள் இராணுவத்தில் சில பகுதியினர் மத்தியில் மனக்கசப்பையும், ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நடைமுறைகளைப் பார்த்தால் படைகளின்மனோதிடம்

கப்படும் பட்சத்தில், இராணுவத்தில் அதிருப்தி நிலை நீடிக்கும் எனவும் ஐலன்ட் சுட்டிக் காட்டுகிறது.

## செயலகத்தில் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட கூட்டம் (4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் போர் தந்திரம் தெரிந்து விட்டதாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் போர்த்தந்திரம் சிறிலங்கா புலனாய்வுப் பிரிவிற்குத் தெரிந்துவிட்டது என்று தென்னிலங்கை சிங்களப் பத்திரிகையான ''லங்கா தீப'' செய்தி வெளியிட்டுள்ளது.

குண்டு வைப்பதற்காக கொழும்பில் அதிக விலை கொடுத்து பழைய கார்களை விடுதலைப் புலிகள் கொள்வனவு செய்தனர் என்று புலனாய்வுப் பிரிவு நம்புகின்றது என்றும் 'லங்கா தீப' தெரிவித்துள்ளது.

புறக் கோட்டை, வத்தளை, கொட்டாஞ்சேனை பகுதிகளில் பொய் முகவரிகளைக் கொடுத்து இக் கார்கள் வாங்கப்பட்டதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே நேரம் பழைய கார்களை வாங்குவோரின் ஆள் அடையாளங்களை பதியு

# விடுதலைப் புலிகள் - பௌத்த குழு

தால் படைகளின்மனோதிடம் நாளடைவில் குறைவதோடு, காலப்போக்கில் பெருமளவில் இராணுவ அதிகாரிகள் பதவியிலிருந்து விலகக் கூடும் என்றும் சில வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

மேலும் சமீபத்திய மாற்றங்கள் இராணுவம் ஒரே அமைப்பாக விளங்கிறது என்பதைக் காட்டுகிறது என்றும், செல்வாக்குள்ள இராணுவ அதிகாரிகள் இந்த இராணுவக் கட்டமைப்பு மாற்றங்களால் பாதிக்

மாறும், எச்சரிக்கையாக இருக்கு மாறும் பிராந்திய பொலிஸ் அதிகாரி மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# வியாழன் முதல் கட்ட பேச்சுக்கள்

(யாழ்ப்பாணம்)

நாளை புதன்கிழமை யாழ் வரவுள்ள பௌத்த நல்லெண்ணத் தூதுக்குழுவினருக்கும்விடுதலைப் புலிகளுக்குமிடையில்வியாழக்கிழமை10.00 மணியளவில் முதல் கட்டப் பேச்சுக்கள் இடம்பெறும் எனத் தெரியவருகிறது.

பத்துப்பேர்கொண்ட இத்தூதுக்குழுவினருடன் இரு உதவியாவர்களும் யாழ். வருகைதர உள்ளனர். அமரபுர நிக்காய வண. பலப்பிட்டிய சிறிசெட்டாதிய மகாநாயக தேரோ தூதுக் குழுவிற்கு தலைமை வகிக்கிறார். இவர் ஒரு தத்துவ முதுமாணியாவார். இவருடன் வண. பண்டிற மாதம்பகம அசாஜி தேரோ தூதுக்குழுவின் செயலதிபராக செயற்படுவார். இவர் புத்தசமய தத்துவ விரிவுரையாளராவார்.

தூதுக்குழு உறுப்பினர்களாக ஜயவர்த்தன புர களனி பல்கலைக்கழக ரஷ்யமொழி விரிவுரையாளரான வண. கலாநிதி பலிகந்த ரட்ணசார தேரோ, சிறிஜினார் தன தொழில்நுட்பக்கல்லூரி ஆலோசகர் வண. பலப்பிட்டிய ரட்ணசிறி தேரோ, களனி சிறுவர் அபிவிருத்திநிதியத்தலைவர் வண. இதிகாகதுவே சுத்தாதேரோ, கிழக்கு அனுராதபுர புத்தசாசன அமைச்சு பொதுச்செயலாளர் வண. விஜயபுர மகாநாமதேரோ, ராஜராமஜதிலக தசுபதோரமய பிரதம தேரரான வண. ரத்பாம சுதீவ தேரோ, விஜயானந்த பிரிவேன அதிபர் வண. ரத்கம திலகசிறி தேரோ, பௌத்த சமய, டாளி பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவர் வண. கிதுல்வல அசாஜிதேரோ, கிழக்கு மாகாண தலைமைச்சங்கநாயக்க வண. மோர்காலி விமலதம்ம நாயகதேரோ அல்லது பட்டதாரி மாணவரான வண. எதிரமுலே தம்மிக தேரோ ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இவர்களின் செயலாளர்களாக மகாநாயக்கதேரோவின் தனிச்செயலாளர் ஹேமாந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்புலி மதியின் நினைவஞ்சலிக் கூட்டம்

[வடமராட்சி கிழக்கு]

கடற்புலி மதியின் (தர்மராசா தயாபரன்) முதலாமாண்டு நினைவஞ்சலிக் கூட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கடற்படையின் வெறியாட்டம்; 26மீனவர்களைக்காணவில்லை

(வடமராட்சி கிழக்கு)

பருத்தித்துறைக் கடலில் நேற்று அதிகாலை சிறிலங்கா கடற்படை நடத்திய வெறியாட்டத்தில், மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் மரணமானார். கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 26 மீனவர்களும், அவர்கள் சென்ற 8 படகுகளும், இச்செய்தி எழுதும் வரை வரை திரும்பவில்லை.

26 மீனவர்களுக்கும், அவர்கள் சென்ற படகுகளுக்கும் என்ன நடந்தது என்பது பற்றி தெரியவில்லை.

இச் சம்பவம் பற்றிக் கடலில் நீந்தி கரை சேர்ந்த மீனவர் ஒருவரின் தகவலின்படி தெரிய வருவதாவது, நேற்று அதிகாலை வெளியிணைப்பு இயந்திரம் இணைக்கப்பட்ட படகுகளிலும். கட்டுமரங்களிலும் கடலுக்குச் சென்று மீன் பிடித்துக் கொண்டிருந்த போது, சிறிலங்கா கடற்படை படகில் வந்தவர்கள் கண்டபடி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனராம்.

சில படகுகளையும், கட்டு மரங்களையும் பிடித்து வைத்திருந்தனராம் இவ்வாறு பிடித்து வைக்கப்பட்டிருந்த படகில் இருந்தவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றித் தெரியவில்லை என்றார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பதவி வெற்றிடம்

### கணக்காளர்

மேற்குறிப்பிட்ட பதவிக்கு தகைமையுள்ளவர்கள் 25 - 04 - 92 காலை 10 மணிக்கு உரிய ஆவணங்களுடனும் சொந்த விபரப் படிவத்துடனும் நேரில் வரவும். வேதனம் நேரில் தீர்மானிக்கப்படும்.

**மாறன் பதிப்பகம்**

274, மருத்துவமனைச்சாலை

யாழ்ப்பாணம். [சி/4302]

# தெரிவுக் குழு தீர்மானத்தின் பின் யாழ். விஜயத்திற்கு நடவடிக்கை

—தொண்டமான்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தீர்மானத்திற்குப் பின்னர் தனது யாழ். விஜயம் குறித்து மீண்டும்நடவடிக்கைகளை தொடரப்போவதாக இ.தொ.கா. தலைவரும், கிராமிய கைத்தொழில்துறை அமைச்சருமாகியஎஸ் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

'வீரகேசரி' பத்திரிகைக்கு தொண்டமான் அளித்துள்ள பேட்டியொன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். பேட்டியின் முழு விபரம் வருமாறு,

அரசாங்கம் இன்னமும் இனப்பிரச்சினைக்கான தனது தீர்வு யோசனையை தெரிவிக்கவில்லை என விடுதலைபுலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் அன்ரன். பாலசிங்கம் கூறியிருப்பதால் அரசாங்கம் தனது யோசனையை முன் வைக்க வேண்டும் என அரசாங்கத்தை வலியுறுத்துவீர்களா? எனக் கேட்ட போது தொண்டமான் தமிழீழக் கோரிக்கைக்கு மாற்று யோசனையை முன் வைத்தால் அதனை அடிப்படையாகக் கொண்டு பேச்சு வார்த்தை நடத்தலாம் என புலிகள் இயக்கம் சமிக்ஞை காட்டியுள்ளது என்று குறிப்பிட்டார்.

பௌத்த குருமார்களைக் கொண்ட குழுவின் யாழ். விஜயம் குறித்து கேட்டபோது,

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்பதை சகல

(4 ஆம் பக்கம் பார்க்க)

# நிலைமை மோசமடைந்தால் உதவிகள் வெட்டப்படும்

## நோர்வே எச்சரிக்கை

(கொழும்பு)

ஒவ்வொரு நாடும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கவும், பாதுகாக்கவும் வேண்டுமென்பதே எமது அடிப்படை எண்ணமாகும். அதனால் தான் வழங்கப்படும் உதவிகளோடு மனித உரிமை விவகாரங்களைத் தொடர்புபடுத்தி எமது பங்காளர்களுடன் பேச்சுக்களின்போது வலியுறுத்தி வருகின்றோம். ஆனால் நிலைமைகள் தொடர்ந்து மோசமடையுமானால் விளைவுகள் எதிர்மறையானதாகவே அமையும்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை அகதிகள்மீது முஸ்லிம்கள் மீண்டும் தாக்கு

திருக்கோணமலை மாவட்டம் பச்சநூர், கிண்ணியா அகதி முகாமில் இருக்கும் தமிழர்கள் மீது முஸ்லிம்களின் தாக்குதல்கள் மீண்டும் அதிகரித்துள்ளன.

இப்பகுதியில் நிரந்தரமாக வசிக்கும் முஸ்லிம்களும், குடியேற்றப்பட்ட முஸ்லிம்களும் அகதிமுகாம்களில் வசிக்கும் தமிழர்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்கின்றனர் ஆண்கள் இல்லாத சமயம் பெண்களையும் குழந்தைகளையும் இவர்கள் தொல்லைப் படுத்திவருகின்றனர்.

இவர்களை முஸ்லிம்களாக மாறும்படியும் அல்லாவிடின் கொலை செய்துவிடுவதாகப் பயமுறுத்தியும் வருகின்றனர். சென்ற ஆண்டு முற்பகுதியில் சுமார் 200 பேர் இவ்வாறு முஸ்லிம்களாக மாற்றப்பட்டுள்ளனர்.

## துரையப்பா வித் சிறந்த பெறு பேறுகள்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வெளியான க. பொ. த (சா. த) பரீட்சை முடிவுகளில் யா/சொழும்புத் துறை துரையப்பா வித்தியாலய மாணவி செ. பகேஸ்வரி நாலு விசேட சித்திகளையும் இரண்டு திறமைச் சித்திகளையும் பெற்றுச் சித்தியடைந்துள்ளார்.

சங்கீதப் பரீட்சைப் பெறுபேறுகள் இன்னும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## அதிபர்களுக்கான அவசரக் கூட்டம்

பாடசாலை மாணவ மதிய உணவு முத்திரை சம்பந்தமாகவும், இரண்டாம் தவணை ஆரம்பம் தொடர்பாகவும் கலந்துரையாடுவதற்கு யாழ் கல்விக் கோட்ட தனியார், தேசிய பாடசாலை அதிபர்களையும், கொத்தணிகள், பாடசாலைகள் அதிபர்களையும் இன்று செவ்வாய்க் கிழமை மு. ப. 9.00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்திற்கும், வடமராட்சிக் கல்விக் கோட்ட கொத்தணிகள், பாடசாலைகள் அதிபர்களை இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணிக்கு நெல்லியடி மகளிர் கல்லூரி மண்டபத்திற்கும் தவறாது சமுகம் தரும் வண்ணம் பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

## பாராளுமன்றம் இன்று கூடும்

(கொழும்பு)


சுமார் ஒரு மாதகால இடைவெளிக்குப் பின்னர் சிறிலங்கா பாராளுமன்றம் இன்று செவ்வாய்க்கிழமை கூடவிருக்கிறது.

பாராளுமன்றம் தொடர்ந்து நான்கு நாட்களுக்குக் கூடும். அப்போது அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதகாலத்துக்கு நீடிக்கவும் அங்கீகாரம் பெறப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## தொடர்புகொள்க

யாழ். போதனா வைத்தியசாலையில் 3ஆம் இலக்க விடுதியில் கட்டுடை மானிப்பாயைச் சேர்ந்த அன்ரனிற்ர சுபாஷினி என அழைக்கப்படும் நோயாளி அவரது சிறிய தாயார் அன்ரன் ஜெயரட்னம் சுமதி என்பவரால் அனு

## முதலாவது பிறந்தின வாழ்த்து



### செல்வி சி. ஹிரிஷா

115, பிறவுண் வீதியில் வசிக்கும் சியாமளேஸ்வரன் றெஜினா தம்பதிகளின் செல்வப் புதல்வி ஹிரிஷா முதலாவது பிறந்த நாளை இன்று அவரது இல்லத்தில் விமரிசையாக கொண்டாடுகின்றார். இவரை அம்மா, அப்பா, அம்மம்மா, அப்பம்மா, சித்தி, மாமாமார், பெரியப்பா, சித்தப்பா, மாமிமார், களத்தில் நிற்கும் கிரிஷாந் சித்தப்பா மற்றும் அன்பு புலி மாமாக்கள் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள்.

(2430)

## இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி இறுதிப்பரீட்சை 1989, 1990, 1991.

கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் பாட நெறிகளுக்கான பரீட்சை எதிரில் குறிப்பிட்டிருக்கும் திகதிகளில் ஆரம்பமாகும் எனப் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

| பயிற்சிநெறி | பரீட்சை ஆரம்பமாகும் திகதி |
|---|---|
| 1. உயர்தேசிய கணக்கியல்/ வர்த்தகவியல் டிப்ளோமா 3-ம் ஆண்டு | 1992 / 05 / 04 |
| 2. தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் (NCT) Electrical, Civil, Mechanical, Q.S | 1992 / 05 / 11 |
| 3. உயர் தேசிய கணக்கியல் / வர்த்தகவியல் டிப்ளோமா 4-ம் ஆண்டு | 1992 / 05 / 18 |
| 4. படம் வரைதல் தொழில்பயில்வோர் சான்றிதழ் | 1992 / 06 / 16 |
| 5. N.C.A.T சான்றிதழ் / உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா 2-ம் வருடம் (புதிய பாடத்திட்டம்) | 1992 / 06 / 08 |
| 6. உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா 3-ம் ஆண்டு (புதிய பாட திட்டம்) | 1992 / 06 / 22 |

பரீட்சை ஆரம்பமாகும் திகதிக்கு முதல் அலுவலக நாளில் உரிய பகுதித்தலைவரிடம் தமது மாணவர் பிரவேச அனுமதிச் சீட்டைக்காட்டித் தமது பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளவும்.

அதிபர்,
தொழில் நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(சி 4301)

## புதிய உயர் கல்லூரி

லபுகம - களத்துவேவ பகுதிகள்

## வனபாதுகாப்பு வலயமாக விரைவில் பிரகடனம்

[கொழும்பு]

லபுகம - களத்துவேவ நீர்த்தேக்கப் பகுதி வனப்பாதுகாப்பு வலயமாக விரைவில் பிரகடனப்படுத்தப்படவிருக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் பெருமளவு மரங்கள் சட்டவிரோதமாகத் தறிக்கப்படுவதை கருத்தில் கொண்டு காணி அபிவிருத்தி அமைச்சு இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதாகவும், நிலைமையை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர அமைச்சினால் மேற்கொள்ளப்படும் அவசர நடவடிக்கைகள் பலவற்றில் இதுவும் ஒன்று எனவும் உத்தியோக பூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சின் அறிவுறுத்தலின் பேரில் நீர்த்தேக்கப்பகுதிகளுக்கு அருகாமையில் உள்ள தனியார் காட்டு நிலங்கள் சுவீகரிக்கப் படவிருக்கின்றன என்றும் கூறப்படுகிறது

### மண்ணிலே மலர்ந்ததால் 20 ஆண்டுகள் மண்ணுக்காய் மாய்ந்ததால் 219 நாட்கள்

வீர ஜனனம் 21 — 04 — 1971



வீர மரணம் 16 — 09 — 1991

மணலாறு களங் கண்ட மாவீரன்

### லெப். டொமினிக் மாஸ்ரர் (நடேசன் குமரேசன்)

நீருரும் எல்லை
நீர்வைப் பதியதனில்
வேரூன்றிப் பிறந்தான்
பெற்றோர் நடேசன் தம்பதியற்கு
பாருள் புகழ் பரப்ப
பதம் வைத்தான் குமரேசன்
மார்தட்டிப் போரிட்டான்
மணலாற்று மண் மீட்பில்

புலமைப் பரீட்சை என்ன
புத்தகக் கல்வி எல்லாம்
தலை மகனாய் சித்தி எய்தியும்
தரியாத சிறு பொழுதும்
எல்லைக் காவலுக்காய்
ஏந்தினான் சுதந்திர ஆயுதத்தை
எல்லார் உள்ளங்களிலும்
ஏகாந்தனாகி அறி துயிலானான்

வீரனுக்கு ஒருமரணம்
விதி அவனிடம் சரணம்
பார் அவன் புகழ் சுமந்து
பவனி வருவதில் தனி சுகம்

டொமினிக் வீதி, பெற்றோர், சகோதரர்கள்
நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (2479)

## யாழ். கல்விப்பிரதேசம் இரண்டாகப் பிரிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள பதினான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பிரிவுக் கல்விக் காரியாலயங்கள் திறக்கப்படவுள்ளன.

யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளரின் கல்வி நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசம் இரண்டாகப் பிரிக்கப்படவுள்ளது. யாழ்ப்பாணத்துக்கு ஒரு கல்விப் பணிப்பாளரும், வடமராட்சிக்கு ஒரு கல்விப்பணிப்பாளருமாக இரு பிரதேசக் கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

புதிய மாற்றங்களுக்கான திட்டமொன்றை வடக்கு- கிழக்கு மாகாணக் கல்வியமைச்சு கொழும்பு மத்திய கல்வியமைச்சுக்குச் சிபார்சு செய்துள்ளது

## யாழ்.பாடசாலைகளில் உடற்கல்விப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் அனைத்துப் பாடசாலைகளிலும் காலை உடற்பயிற்சி நடத்தப்படவேண்டும் என யாழ்.கல்வித் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இவ்வாறு உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளரினால் விடப்பட்ட செய்திக் குறிப் பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அதில் குறிப்பிட்டிருப்பதாவது: அநேகமான பாடசாலைகள் இவ்விடயத்தில் சிறப்பாகச் செயற்படுகின்ற போதிலும் ஒரு சில அசிரத்தையாக இருந்து வருகின்றன. இவ்வாறான பாடசாலைகளில் இரண்டாம் தவணை ஆரம்பம் தொடக்கம் உரிய நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

க.பொ.த.

## பரீட்சைகளில் மோசடி 2600 சம்பவம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கடந்த க.பொ.த சாதாரண தர உயர்தரப் பரீட்சைகளின் போது 2600 மோசடிச் சம்பவங்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆள்மாறாட்டம், சோதனைகளில் போலி அறிமுக அட்டை சமர்ப்பிக்கப்பட்டமை, விடைத்தாள்கள் பரிமாறப்பட்டமை ஆகியவை இவற்றில் அடங்கும் எனவும் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பலாலி சிறிலங்கா ராணுவ முகாமிலுள்ள

## இளைஞர்களை பார்வையிட செஞ்சிலுவை பிரதிநிதிகள்

(யாழ்ப்பாணம்)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமில் பல மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்களைப் பார்வை இடுவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ்கிளையின் பிரதிநிதிகள் குழு நாளை அங்கு செல்ல உள்ளது.

இக்குழுவினர் கடந்தமாதமும் பலாலி இராணுவ முகாமிற்குச் சென்று அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள 154 இளைஞர்களையும் பார்வையிட்டதுடன் அவர்களிடம் இருந்து கடிதங்களை பெற்று வந்து உறவினர்களிடம் ஒப்படைத்ததும் தெரிந்ததே. (ச)

## தீவுப் பகுதிக்கு அழைத்துச் செல்லப்படுவர்

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதிகளிலிருந்து யாழ் போதனா வைத்திய சாலைக்கு சிகிச்சைக்கென சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினால் அழைக்கவரப்பட்ட

## இன்று வரும்

மதிக்கப்பட்டுள்ளார். இவர் பண்டத்தரிப்பு வை எம் சி ஏ யில் தங்கியிருந்து கல்வி பயின்று வந்தவராவர்.

இவரதுசிறியதாயாரோ அல்லது உறவினர்களோ உடனடியாக நோயாளர் நலன் புரிச் சங்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

---


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

விஞ்ஞானபீட முதலாவது அரையாண்டுப் பரீட்சை - 1991

மேற் குறிப்பிட்ட பரீட்சைகள் யாவும் பின்வரும் திகதிகளுக்குப் பின் போடப்பட்டுள்ளது.

முதலாவது அரையாண்டு முதலாவது வருடப்பரீட்சை ஆரம்பம் 27-04-1992 முதலாவது அரையாண்டு இரண்டாம் வருடப்பரீட்சை ஆரம்பம் 06-05-1992 முதலாவது அரையாண்டு மூன்றாம் வருடப்பரீட்சை ஆரம்பம் 11-05-1992.

பதிவாளர்

[சி/4300]


---


New College of High Studies

A/L 92

Paper Classes

ஆரம்பம் - 28-04-92

(செவ் -- வியா)

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | லோகசிங்கம் (11 மணி) |
| இ. நாகரிகம் | — | அருள்நங்கை (10 மணி) |
| வர்த்தகம் | — | பசல் (9 மணி) |
| தமிழ் | — | ரவி (8 மணி) |
| அளவையியல் | — | மகேந்திரன (12 மணி) |
| கணக்கியல் | — | ராஜன (1 மணி) |
| அரசியல் | — | கியூபேட் (2 மணி) |

(சி-4277)


---


A/L 94

கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புகள்

ஆரம்பம்: 23.04.92

காலை 9.00 மணி

★ முன் கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

(சி/4292)


---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பத்மினி பாலச்சந்திரன்

அச்சுவேலி

தோற்றம்:- 15-01-1953 மறைவு:- 25-04-1989

எம் குடும்பத்தின் ஒளிவிளக்கே! வாடாத எம் இதயமலரே! எம் தெய்வமே! அன்பின் பிறப்பிடமாக இருந்த எம் செல்வமே! நின்பிரிவால் தவிக்கிறோம். மூன்றாண்டு எப்படி சுழன்றாலும் உன்னை எம்மால் மறக்கமுடியவில்லை.

நின் ஆன்மா சாந்தியடையச் சிவபெருங்கடவுளுடைய பொற்பாதங்களை இறைஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
அன்புக்கணவர், பிள்ளைகள்
உறவினர்.

சி 4297

---

வர்களில் அனலைதீவு, எழுவைதீவு ஆகிய இடங்களைச் சேர்ந்த பன்னிரண்டு பேர் நேற்றுக் காலை ஆறு முப்பது மணியளவில் காங்கேசன் துறைக்கு செல்லும் வாகன அணி மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கிருந்து கப்பல் மூலம் அவரவர் இடங்களுக்கு கூட்டிச் செல்லப்படுவர் எனத் தெரிய வருகிறது.

இவ்வாறாகநாளை நெடுந்தீவு, நயினாதீவு பகுதிகளை சேர்ந்த சுமார் பன்னிரண்டு பேர் காங்கேசன் துறை மூலமாக அழைத்துச் செல்லப்பட விருப்பதாகவும் தெரியவருகின்றது. (பா)

(யாழ்ப்பாணம்)

குமணா கப்பல் அத்தியாவசிய உணவுப் பொருட்களுடன் இன்று இங்குவந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் திருக்கோணமலையில்இருந்து அரிசி, மா, சீனி போன்ற அத்தியாவசிய பொருட்களையும் வேறு சில பொருட்களையும் ஏற்றிக் கொண்டு இக்கப்பல் புறப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச)

---

## நினைவுகூருகின்றோம்...

## 1992-04-21

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு, புலிபாய்ந்தகல் பகுதியில் எமது முகாமொன்றின் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய -

**நிர்மலன்** (குணரட்ணம் தனபாலசிங்கம் - ஏறாவூர் - 4, மட்டக்களப்பு.)

1988 ஆம் ஆண்டு மயிலியதனையில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். தம்புக்கிளி** (மாணிக்கம் பாலச்சந்திரன் - மயிலியதனை, வல்வெட்டித்துறை)

1989 ஆம் ஆண்டு சுளிபுரம், பண்ணாகம் பகுதியில் வீட்டுக்குள் புகுந்த இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்.

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(சி/4299)

## சிந்தனைக்கு

துரோகத்தின் குருதி கறைப்
பதாகை எங்கள் தலைக்குமேல்
பறக்கிறது.
— பிரான்ஸின் தேசிய கீதத்திலிருந்து


# ஈழநாதம்

61, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 21-04-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2808
த. பெ. எண் 65


## கோடரி காம்புகளின் கவலை

"பௌத்த பிக்குகளின் யாழ் விஜயம் பிரச்சினைக்குத் தீர்வு காணப் போவதில்லை இது இராணுவ நடவடிக்கையைத்தான் காலதாமதமாக்கலாம் என கொழும்பிலுள்ள சிங்கள அரச ஆதரவு தமிழ்க்குழுக்கள் தெரிவித்துள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியப்படப் போவதில்லை; அரசியல் தீர்வே சாத்தியமானது என உலக நாடுகள் பலவும், பல சர்வதேச ஸ்தாபனங்களும் வற்புறுத்தி வருகின்றன. சிறிலங்கா அரசாங்கமும் இனப்பிரச்சினை தீர்விற்கு இராணுவத் தீர்வை நாடி நின்றாலும் அதில் பூரண வெற்றி ஈட்டிவிட முடியுமா எனச் சந்தேகம் கொண்டு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்விற்கான வழி முறைகளை முற்றாக மூடிவிட அஞ்சுகின்றது. ஆனால், கொழும்பில் பேரினவாத சிங்கள அரசாங்கத்துடன் இணைந்து நிற்கும் தமிழ்க் குழுக்கள் மட்டும் இராணுவத் தீர்வை வற்புறுத்துகின்றன. அதாவது யாழ்ப்பாணப் படை எடுப்பை உடன் நடத்த வேண்டும் என வலியுறுத்துகின்றன.

இதேவேளை, யாழ்ப்பாண குடாநாட்டின் மீது படை எடுத்து அதனைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர விருப்பமின்மையால் சிறிலங்கா இராணுவம் தனது படை எடுப்பை நடத்தாமல் இல்லை. யாழ்ப்பாண குடாநாட்டுப் படை எடுப்பை மேற்கொண்டால் வெற்றி கிட்டுமா என்பது குறித்து இராணுவ மட்டத்தில் பலத்த கருத்து முரண்பாடு உள்ளது. அவ்வாறு வெற்றி கிட்டினாலும் இதற்காக ஏற்படும் இராணுவத்தினரின் இழப்பை தாக்கு பிடிக்க முடியுமா என்ற சந்தேகமுமுள்ளது. அத்தோடு, இன்று மனித உரிமைகள் தொடர்பாக கண்டனத்திற்கு உள்ளாகியுள்ள இராணுவம், இப்படை எடுப்பால் ஆயிரக் கணக்கில் மக்கள் கொல்லப்படின் மேலும் கண்டனத்திற்கு உள்ளாகக் கூடும் என்ற அச்சமும் இவை யாவற்றிற்கும் மேலாக யாழ்ப்பாணத்தை வெற்றி கொண்டு விட்டால் மட்டும் இனப்பிரச்சினைக்கு தீர்வைக் கண்டு விட முடியுமா? என்று எழுந்துள்ள கேள்வியும் முக்கியமானதாகும்.

யாழ்ப்பாணத்தின் மீது பாரிய தாக்குதல் ஒன்று மேற் கொள்ளப்பட்டு, மக்கள் பெருமளவில் கொன்றொழிக்கப்பட்டால் சமாதானத்திற்கான கதவுகள் மூடப்பட்டு விடும் என விடுதலைப் புலிகள் தெளிவாகவே தெரிவித்து விட்டார்கள். அன்னை பூபதியின் நான்காம் ஆண்டு நினைவையொட்டி தலைவர் பிரபாகரன் விடுத்துள்ள செய்தியில், 'தமிழீழ மண்...

# தமிழீழ மண்ணில் சிங்களக் குடியேற்றங்கள் - ஒரு நோக்கு

சென்றதொடர்ச்சி

1881 ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்படி திருக்கோணமலை மாவட்டத்தின் மொத்தச் சனத்தொகையான 22197 பேரில் 14394பேர் தமிழர்களாகவும், 935 பேர் மட்டுமே சிங்களவர்களாகவும் இருந்தனர். ஆனால் 1981 ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்படி இம் மாவட்டத்தின் மொத்தச் சனத்தொகையான 255948 பேரில் 87760 பேர் தமிழர்களாகவும், 85503 பேர் சிங்களவர்களாகவும் இருந்தனர். எனவே 1881-1981 காலப்பகுதியில் திருக்கோணமலை மாவட்டத்தில் தமிழர்களின் தொகை 510 சத வீதத்தினால் மட்டுமே அதிகரித்திருக்க, சிங்களவர்களின் தொகை, 9045சத வீதத்தினால் அதிகரித்திருந்தது. இதன் விளைவாக 1881 இல் இம் மாவட்டத்தின் மொத்தச் சனத்தொகையில் 65 சதவீதமாக இருந்த தமிழர்களின் பங்கு 1981 இல் 34 சத வீதமாக வீழ்ச்சியடைந்தது. அதே நேரத்தில் 1881 இல் இம் மாவட்டத்தின் மொத்தச் சனத்தொகையில் 4 சத வீதமாக மட்டுமே இருந்த சிங்களவர்களின் தொகை 1981 இல் 33 சத வீதமாக உயர்ந்தது. எனவே 1881 இல் 15:1 எனக் காணப்பட்ட தமிழர். சிங்களவர் விகிதம், 1981 இல் ஏறத்தாழ 1:1 என மாற்றமடைந்தது. அது மட்டுமன்றி 1977 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் இம் மாவட்டத்தில் சேருவல என்ற புதிய தேர்தல் தொகுதி மூலம் ஒரு சிங்களப் பிரதிநிதி பாராளுமன்றம் சென்றார்.

எனவே, கிழக்கு மாகாணத்தில் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட முதல் பத்தாண்டு காலத்தில் அம்பாறைத் தேர்தல் தொகுதி மூலம் முதலாவது சிங்களப் பாராளுமன்றப் பிரதிநிதியும், அடுத்து பதினைந்து ஆண்டுக் காலத்தில் சேருவல தேர்தல் தொகுதி மூலம் மற்றுமொரு சிங்களப் பிரதிநிதியும், பாராளுமன்றம் செல்லக் கூடிய நிலைமை உருவாகியது.

சி. வரதராஜன்

வட மாகாணத்தைப் பொறுத்தவரையில் வவுனியா மாவட்டத்திலேயே முதலில் குடியேற்றத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. 1956 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட பாவற்குளம் குடியேற்றத்திட்டம் குறிப்பிடத்தக்க தொன்றாகும். ஆரம்பத்தில் இக் குடியேற்றத்திட்டத்தில் 595 தமிழ்க் குடும்பங்களும் 463 சிங்களக் குடும்பங்களும் குடியமர்த்தப்பட்டன ஆனால் பிற்பட்ட காலங்களில் இங்குள்ள தமிழ்க் குடும்பங்கள் இங்கிருந்து துரத்தப்பட்டன தற்போது இது ஒரு சிங்களக் குடியேற்றப் பிரதேசமாகவே உள்ளது பிரதான குடியேற்றத் திட்டங்கள், நடுத்தர மட்டத்திலான நீர்ப்பாசனத்திட்டங்கள், கிராம விரிவாக்கத்திட்டங்கள் என்ற பெயர்களில் பல்வேறுபட்ட குடியேற்றத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இம் மாவட்டத்தின் ஒரு முக்கிய அம்சம் என்னவெனில், சிங்கள மக்களுக்கு என ஒரு தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. வவுனியா தெற்கு பிரிவு இரண்டாகப் பிரிக்கப்பட்டு வவுனியா தெற்கு சிங்களப் பிரிவு என ஒரு உதவி அரசாங்க அதிபர் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது இப் பிரதேசத்தில் அம்பலாங்கொடல்ல என்ற ஒரு கிராமம் வவுனியா தெற்கு (சிங்களம்) உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ளது. இலங்கையின் தென்மாகாணத்தில் உள்ள அம்பலாங்கொட என்ற கிராமத்திலிருந்து வந்து இங்கு குடியேறிய மக்கள், அம்பலாங்கொடல்ல என்ற பெயரில் ஒரு குடியேற்றக் கிராமத்தை உருவாக்கியமை குறிப்பிடத்தக்கது. இம் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்த குடியேற்றத் திட்டங்களின் விளைவாக இம் மாவட்டத்தின் இன விகிதாசாரம் பெருமளவு மாற்றமடைந்தது. 1881 இல் வவுனியா மாவட்டத்தில் 1157 சிங்களவர்களும் 13164 தமிழர்களும் காணப்பட்டனர் 1981 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்படி இம் மாவட்டத்தில் தமிழர்களின் எண்ணிக்கை 54179 பேராகவும், சிங்களவர்களின் எண்ணிக்கை 15794 பேராகவும் இருந்தது. எனவே வவுனியா மாவட்டத்தில் 1881- 1981 காலப் பகுதியில் தமிழர்களின் எண்ணிக்கை 312 சத வீதத்தினால் மட்டுமே அதிகரிக்க சிங்களவர்களின் தொகை 1265 சத வீதத்தினால் அதிகரித்திருந்தது இதன் விளைவாக 1881 இல் வவுனியா மாவட்டத்தின் மொத்தச் சனத்தொகையில் 7.4சத வீதமாக இருந்த சிங்களவர்களின் தொகை 1981 இல் 16 6 சத வீதமாக அதிகரித்திருந்தது.

(3)

மாறாக 1881 இல் 84. 6 சத வீதமாக இருந்த தமிழர்களின் பங்கு 1981 இல் 56 8 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது,

### துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம்

அண்மை ஆண்டுகளில் அதாவது எண்பதுகளில் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு பாரிய குடியேற்றத் திட்ட நடவடிக்கை, துரித மகாவலி அபிவிருத்தித் திட்டமாகும். 1965 ஆம் ஆண்டுக்கும் 1968 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் தயாரிக்கப்பட்ட பெருந்திட்டத்தில் ( Master Plan ), மகாவலி கங்கையில் பாயும் 43 லட்சம் சதுர அடி நீரை நாட்டின் உலர்வலயத்திலுள்ள 900,000 ஏக்கர் ( 3 64,500 ஹெக்டேயர் ) பரப்பில் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டது. மேலும் 15 பலநோக்குத் திட்டங்களையும் 6 வடிநிலக் குறுக்கு திசை திருப்புக் கால்வாய்களையும் மொத்தம் 500 மெகாவாட் மின்சக்தியை உற்பத்தி செய்யவல்ல பல மின்சார நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கும் ஐந்து இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களைக் குடியேற்றுவதற்கும் முனனர் திட்டமிடப்பட்டிருந்தது. இப் பெருந்திட்டத்தின் ஒரு கட்டமாக வடமத்திய மாகாணத்திலும் வடமாகாணத்திலும் நீர்ப்பாய்ச்சுவதற்காகவும் சுமார் 300 மெகாவாட் மின் சக்தியை உற்பத்தி செய்யவல்ல மின்சார நிலையங்களை நிறுவுவதற்காகவும் கொத்மலை, ரந்தெனிகல போன்ற மற்றும் நீர்த்தேக்கங்களையும் உமா ஓயா லொக்கல் ஓயா, அம்பன் கங்கையின் சில கிளை நதிகள் ஆகியவற்றின் மீது நீர்த்தேக்கங்களையும் அமைக்கும் வேலைகள் அடங்கியிருந்தன.

( தொடரும்)

# அவுஸ்திரேலியாவில் குடியேறுவோர் எண்ணிக்கை குறைக்க ஏற்பாடு

[சிட்னி]

அவுஸ்திரேலியாவில் அடுத்த வருடம் குடியேறுவோரின் எண்ணிக்கையை 81.000 பேரால் குறைப்பதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று உத்தியோகபூர்வ வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'ஏஜ்' என்ற செய்திப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

அடுத்த வருடம் 80.000 பேருக்கு மட்டுமே அவுஸ்திரேலியாவில் குடியேற அனுமதி வழங்கப்படும் என்றும் அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவில் குடியேறுவோரின் எண்ணிக்கையை குடியேற்ற அமைச்சர் ஜெரி ஹாண்ட் கட்டுப்படுத்த எண்ணியுள்ளாரென்றும் குடியேறுவோரின் ஆங்கிலத் திறமைக்கு முன்னுரிமை வழங்கப்படுமென்று அவர் கூறினார் என்றும் 'ஏஜ்' பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் 1993 யூன் 30 ஆம் திகதியுடன் முடிவடையும் அடுத்த வருட காலப்பகுதிக்கென எண்பதினாயிரம் பேருக்கு, மட்டுமே அவுஸ்திரேலியாவில் குடியேற அனுமதிப்பதென்ற அமைச்சரின் தீர்மானத்திற்கு ...

# யுத்தக் கைதிகளை பரிமாற ஈரான்-ஈராக் இணக்கம்

(ஜெனிவா)

மே மாதம் முதல் தேதியிலிருந்து ஆயிரக்கணக்கான யுத்தக் கைதிகளை பரிமாறிக் கொள்வதற்கு ஈராக்கும்-ஈரானும் இணக்கம் தெரிவித்துள் ... தங்கவிரும்புகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தக்கைதிகள் பரிமாற்ற உடன்படிக்கையின் கீழ் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டி ஈரான் சென்று ...

## இந்திரா காங்கிரஸ்

# செயற்குழுவிலிருந்து இருவர் ராஜினாமா

(டில்லி)

இந்திராகாங்கிரஸ் செயற்குழுவில் இருந்து அஹமட் பட்டேல் ராஜினாமாச் செய்துள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் உயர் கொள்கை நிர்ணய அமைப்பிற்கு செடுல் வகுப்பைச் சேர்ந்தவர்களோ, மகளிரோ யாரும் தேர்ந்தெடுக்கப்படாததைக் கருதித்தான் ராஜினாமாச்செய்துள்ளதாக, இந்திரா 'காங்கிரஸ் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

திருப்பதி மகாநாட்டில் பட்டேல் செயற்குழு உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டது தெரிந்ததே.

முன்னதாக செயற்குழு உறுப்பினர் ஜிதேந்திர பிரசாத் இதே காரணத்திற்காக ராஜினாமாச் செய்தது குறிப்பிடத்தக்கது.

## ஆப்கானிஸ்தானில்

# இடைநிலை சபை அமைக்க வகீல் - அகமத்ஷா பேச்சு

மூடப்பட்டு விடும் என விடுதலைப் புலிகள் தெளிவாகவே தெரிவித்து விட்டார்கள். அன்னை பூபதியின் நான்காம் ஆண்டு நினைவையொட்டி தலைவர் பிரபாகரன் விடுத்துள்ள செய்தியில், 'தமிழீழ மண் மீது பெரும் ஆக்கிரமிப்பு நடத்தப்பட்டு தமிழ் மக்கள் பெரும் தொகையில் கொன்று குவிக்கப்பட்டால், நாம் திறந்து வைத்திருக்கும் சமாதானக் கதவு மூடப்பட்டு விடும் என்பதைத் தெட்டத் தெளிவாக எடுத்துக் கூற விரும்புகிறேன்' என இதனைத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் சிறிலங்கா அரசாங்கம் இராணுவத் தீர்வை நாடி நிற்பினும் அரசியல், பொருளாதார நெருக்கடிகளின் காரணமாகவும், இராணுவத் தயாரிப்பிற்குத் தேவையான கால அவகாசத்தையும் பெறுவதற்காகவுமே சமாதான முயற்சிகளுக்கும் பச்சைக் கொடி காட்டிய வண்ணம் உள்ளது. இதனை விளங்கிக் கொள்ள முடியாத கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் இராணுவ நடவடிக்கைகளை விரைவு படுத்துமாறும் புலிகளை குடாநாட்டை விட்டு விரட்டி விடுமாறும் கூப்பாடு போடுகின்றன.

இதேவேளை பிக்குமார்களின் நல்லெண்ண விஜயங்கள் அரசியல் தீர்வைக் கொண்டுவரும் என தமிழ் மக்கள் எவரும் பெரிதாக எதிர்பார்க்கவில்லை. ஏனெனில், யாழ்ப்பாணம் வரும் பௌத்த பிக்குகளின் விஜயம் குறித்து சிறிலங்கா அரசியல் வாதிகள் பௌத்த மத பீடங்கள் என்பனவற்றுக்கிடையிலேயே பெரும் கருத்து முரண்பாடுகள் உள்ளன. குறிப்பாக பௌத்த பீடங்களிலேயே பெரியவையும், பலமானவையும், அரசியல் செல்வாக்கு மிக்கவையுமான அஸ்கிரிய, மல்வத்த பீடங்கள் இவர்களின் விஜயத்தை ஆதரித்ததாகத் தெரியவில்லை. அத்தோடு, இங்கு வரும் நல்லெண்ணத் தூதுக்குழுவினர் கொழும்பில் இருந்து விடும் அறிக்கைகளை நோக்கும் போது அவை பௌத்த பிக்குக்களின் கடந்த கால இனவாத நடவடிக்கைகளை மறைப்பதற்காகவும், மறுப்பதற்காகவும் மேற்கொள்ளப்படும் பயணமாக உள்ளது போல் தெரிகின்றதே ஒழிய பிரச்சினைக்கு முதன்மை கொடுப்பது போல் தெரியவில்லை. ஆனால், இனவாதப் பிரச்சினை தீர்வு தொடர்பாகவே தமது பயணம் மேற்கொள்ளப்படுவதாகப் பிக்குகள் தெரிவித்திருப்பதினால் மட்டுமே தமிழ் மக்கள், இது குறித்து சற்றுக் கவனம் செலுத்தியுள்ளனர்.

ஆனால், கொழும்பிலுள்ள தமிழ் குழுக்களோ பௌத்தபிக்குகள் யாழ்ப்பாணம் செல்லுவதினால் ஏதாகிலும் ஒரு சமாதானச் சூழ்நிலை உருவாகி, பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்து தாம் புறந்தள்ளப்பட்டு விடுவோமோ என அஞ்சுகின்றன. புலிகள் வென்றாலும் பிரச்சினை தோற்றாலும் பிரச்சினை என்ற நிலையில், கொழும்பில் தொங்கிக் கொண்டிருக்கும் தமிழ்க் குழுக்கள், தற்பொழுது பிக்குகளின் விஜயத்தால் அரசாங்கம் தங்களைக் கைவிட்டு விடுமோ என்ற அச்சத்தில் இராணுவ நடவடிக்கைகள் பற்றி பேசுகின்றன. இதனால் ஆயிரக்கணக்கில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டாலும் பரவாயில்லை என்பது அவர்கள் நிலைப்பாடு அதாவது சிறிலங்காவின் ஆக்கிரமிப்பு வேகமும், படுகொலை அளவும் போதாது என இத்தமிழ்க் குழுக்கள் கவலை கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

---

யுத்தக் கைதிகளை பரிமாறிக் கொள்வதற்கு ஈராக்கும்-ஈரானும் இணக்கம் தெரிவித்துள்ளன என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டி தெரிவித்துள்ளது.

சுமார் 20.000 ஈராக்கிய ராணுவவீரர்கள் ஈரானில் உள்ளனர், ஆயிரம் ஈரானிய ராணுவ வீரர்கள் ஈராக்கில் உள்ளனர் என்றும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் தெரிவித்துள்ளது. ஆனால் ஈரானோ ஐயாயிரம் ஈரானிய வீரர்கள் அங்கிருப்பதாக தெரிவித்துள்ளது. பெரும் பாலான ஈராக் யுத்தக் கைதிகள் ஈரானில் உடன்படிக்கையின் கீழ் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டி ஈரான் சென்று கைதிகள் பரிமாற்றத்தைத் தற்காலிகமாகக் கவனிக்க அனுமதிக்கப்படும் என்றும்,

யுத்தக்கைதிகள் தரைமார்க்கமாகப் பயணம் செய்து எல்லைப்புறத்தில் விடப்படுவார்கள் என்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

1991ஆம் ஆண்டு நவம்பரில் கடைசியாக இரு நாடுகளுக்குமிடையில் யுத்தக் கைதிகள் பரிமாற்றம் இடம் பெற்றது தெரிந்ததே.

---

மட்டும் அவுஸ்திரேலியாவில் குடியேற அனுமதிப்பதென்ற அமைச்சரின் தீர்மானத்திற்கு சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் எதிர்ப்புத் தெரிவிக்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

1992-93 ஆம் ஆண்டுகளில் 1,18,000 பேர் அவுஸ்திரேலியாவில் குடியேற அனுமதிப்பதென்று முன்னர் முடிவெடுக்கப்பட்டிருந்தது. ஆனால் தக்க நிலை, அவுஸ்திரேலியாவில் குடியேறுவோர் மத்தியில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டம், குடியேற்றம் பற்றிய வாதப் பிரதி வாதங்கள் அதிகரித்தமை, அவுஸ்திரேலியாவில் குடியேறச் சிலரே விரும்புகின்றனர் போன்ற காரணங்களால் இத் தொகையைக் குறைக்க முடிவு செய்யப்பட்டது.

அத்துடன் இனிமேல் திறமை, கல்வி, மொழி, பணம் ஏற்கவே அவுஸ்திரேலியாவில் வசித்து இருந்த உறவினர்கள் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டே புள்ளிகளின் அடிப்படையில் அவுஸ்திரேலியாவில் குடியேறுவோர் தேர்ந்தெடுக்கப் படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ. நா.வின் முடிவை இந்தியா பின்பற்றும்

ஆப்கானிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி நஜிபுல்லாவின் எதிர்காலம் பற்றி ஐ நா. சபை மேற்கொள்ளும் முடிவை இந்தியா தானும் பின்பற்றப் போவதாக அறிவித்துள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சு நேற்றுமுன்தினம் இதனைத் தெரிவித்துள்ளது. அத்துடன் நஜிபுல்லாவின் எதிர் காலம் பற்றி ஐ நா. சபைதான் முடிவு எடுக்க வேண்டும் என்றும் வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது.

## ஆப்கான் கிளர்ச்சியாளர் கூட்டணி அமைப்பு

ஆப்கானிஸ்தான் கிளர்ச்சியாளர் பிரிவுகள் கூட்டணி ஒன்றை அமைத்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அங்கு பெரும்பான்மையான இடங்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அரச எதிர்ப்பு கிளர்ச்சிக்குழுக்களே இவ்வாறு கூட்டணியைஅமைத்துள்ளன.

இந்தக் கூட்டணி இஸ்லாமிய ஜாத்சபை என அழைக்கப்படும் முஜாகுதீன் தலைவர் அகமத் ஜா மச்சூத் இதற்குத் தலைவராக உள்ளார். தனது படைகள் காபூலிலிருந்து 60 கிலோமீற்றர் தூரத்தில் நிலை கொண்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தரர்.

முஜாகுதீன் அரசு அமைக்கப்பட்ட பின்னரே தனது படைகள் காபூலுக்குள் நுழையும் எனவும் இரத்தம் சிந்துவதைத் தடுக்க இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை காபூலில் ஒரு நடுநிலை ஆட்சிக் குழுவுக்குப் பதிலாக கிளர்ச்சியாளர்களே பதவியை ஏற்கவேண்டுமென்பதைப் பாகிஸ்தான் ஏற்றுக் கொண்டுள்ளது. இது ஐ நா. சபையினால் முன்னர் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு முற்றிலும் எதிரானது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சர்வதேச ரீதியில் தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களை இஸ்ரேல் பயன்படுத்துகிறது

(அல்ஜிரியஸ்)

இஸ்ரேல் சர்வதேச ரீதியில் தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துவதாக பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் அல்ஜீரியசில் செய்தியாளர்களிடையே பேசிய அவர் இஸ்ரேல் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துவதை பெல்ஜியம் மற்றும் அமெரிக்க மருத்துவ பரிசோதனை அறிக்கைகள் தெரியப்படுத்துவதாக குறிப்பிட்டார்.

## வகீல்-அகமத்ஷா பேச்சு

(காபூல்)

ஆப்கானிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்துல் வகீலும் முஜாகுதீன் குழுவினர் தலைவரான அகமத்ஷாவும் காபூலில் இடைநிலைசபையொன்றை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி இரண்டு சுற்றுப் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காபூலில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் அந்த நாட்டின் எந்தவொரு நகரத்தின் மீதும் குறிப்பாக காபூலின் மீது தாக்குதல் நடத்துவதினின்று முஜாகுதீன் படைகள் விலகியிருக்கும் என்றும் கூறினார்.

ஆனால் இந்தப் பேச்சுக்கள் எந்த முடிவுகளையும் எடுக்கவில்லை என்று, முஜாகுதீன் வட்டாரங்கள் தெரிவித்தன.

## ராஜதந்திரிகளை வெளியேற லிபிய அரசு பணிப்பு

(திரிபோலி)

விமானக் குண்டு வெடிப்பு சம்பந்தமாக ஐக்கிய நாடுகள் சபையுடன் சர்ச்சையில் ஈடுபட்டிருக்கும் லிபியா மேற்கு நாடுகளின் ராஜதந்திரிகள் சிலரை நாட்டைவிட்டு வெளியேறும்படி கட்டளை பிறப்பித்துள்ளது. லிபிய வெளிநாட்டமைச்சு கடந்த சனியன்று வெளிநாட்டு தூதுவர்களை அழைத்து நாட்டை விட்டு வெளியேற வேண்டிய ராஜதந்திரிகளின் பெயர்கள் அவர்களின் பதவிகளும் அறிவிக்கப்பட்டதாக கூறப்படுகின்றது இதே போன்று குறிப்பிட்ட சில நாடுகளில் இருக்கும் லிபியத் தூதுவர்களும் மீள அழைக்கப்படவுள்ளனர்.

பெல்ஜியம், பிரேசில், செக்கோசெலவாக்கியா, பிரான்ஸ், ஜெர்மனி, ஹங்கேரி, இத்தாலி, ஜப்பான், ஸ்பெயின், சுவீடன் ஆகிய நாடுகள் லிபிய ராஜதந்திரிகளை வெளியேறும்படி கேட்டிருந்தமை தெரிந்ததே.

## கியூபாமீதான வர்த்தகதடை தீவிரமாக்க அமெ. முடிவு

கியூபாவின் மீதான தனது வர்த்தகத்தடையை மேலும் தீவிரமாக்கப் போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

கியூபாவுடன் வர்த்தகத்தில் ஈடுபடும் எந்தக் கப்பல்களும் வருங்காலத்தில் சிறப்பு அனுமதி பெறாமல் அமெரிக்கத் துறை முகங்களினுள் பிரவேசிக்க முடியாது என்று வாஷிங்டனில் அமெரிக்க அதிபர் ஜோர்ச்புஷ் அறிவித்துள்ளார்.

முன்னாள் சோவியத் யூனியனின் இராணுவ உதவியும், பொருளாதார உதவிகளும் நிறுத்திவைக்கப்பட்டிருப்பதால் ஏற்கனவே நெருங்குதலில் இருக்கும் அதிபர் பிடல் கஸ்ரோ அரசை, மேலும் ஒதுக்கிவைப்பதே இந்த அறிவிப்பின் நோக்கமாகும்.

## சோனியாகாந்தி எழுதும் நூல்

(டில்லி)

ராஜீவ் காந்தி பற்றி அவரது மனைவி சோனியாகாந்தி நூல் ஒன்றினை எழுதி வருகின்றார்.

ராஜீவ் மரணமடைந்த ஒரு வருடதினமான மே 21 ஆம் திகதி இந்த நூல் வெளியிடப்படும் என்று இந்திரா காங்கிரஸ் எம்.பி. டாக்டர் ரத்னாகர் பாண்டே தெரிவித்துள்ளார்.

அத்துடன் சோனியா காந்தி மே மாதம் 21 ஆம் திகதி சிறிபெரம்புதூரில் ராஜீவ் நினைவாலயத்திற்கான அடிக்கல்லை நாட்டுவார் என்றும் அவர் தெரிவித்தார்.

ஈழநாதம்

இலஸ்ரேட்டட் வீக்லி கட்டுரையாளரை

# கைது செய்து சட்டசபையில் ஆஜர்படுத்துவதென முடிவு

(சென்னை)

த இலஸ்ரேட்டட் வீக்லி ஒவ் இன்டியாஎன்னும் ஆங்கில வார இதழின் முன்னாள் கட்டுரையாளர் கே.பி. சுனிலைக் கைது செய்து தமிழக சட்டப் பேரவை முன் ஆஜர் படுத்துவது என்று தமிழக சட்டப் பேரவை முடிவு செய்து உள்ளது.

இதே போல கோவையிலிருந்து வெளிவரும் 'மாலை முரசு' சென்னையிலிருந்து வெளிவரும் 'முரசொலி' ஆகியவற்றின் ஆசிரியர்களையும் சட்டப் பேரவைக்கு வரவழைத்து கூண்டிலேற்றிக் கண்டிப்பது என்றும் பேரவை தீர்மானித்துள்ளது

இலஸ்ரேட்டட் வீக்லி இதழில் பேரவையின் முந்திய நிகழ்ச்சிகளின் புகைப்படங்களை பிரசுரித்து அவை இப்போதைய பேரவையில் இடம் பெற்றது போல் காட்டி சட்டப்பேரவையை களங்கப் படுத்த முயற்சி எடுக்கப்பட்டதாகவும், அதனால் அப் பத்திரிகையின் கட்டுரையாளர் மற்றும்ஆசிரியரையும் பேரவைக்கு அழைத்து கூண்டிலேற்றிக் கண்டிக்கவேண்டும் என்று உரிமைக் குழுபரிந்துரைசெய்தது. அப் பரிந்துரையை ஏற்றுக் கொண்டபேரவை நேற்றுஅந்த இருவரையும் அவை முன் ஆஜராகவேண்டுமெனப்பணித்தது இதற்காக விசேட கூண்டு ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது.

ஆனால் கட்டுரையாளர்கே. பி. சுனில் தாம் ஒரு மாதத்திற்கு அவைக்கு வர முடியாதிருப்பதாக, கடிதம் எழுதியிருப்பதாகவும், அக் கடிதத்தில் உரிமைக் குழுவின் முடிவுக்கு உள்நோக்கம் கற்பிக்கப் பட்டுள்ளது எனவும் அவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையா தெரிவித்தார். இதனால் அவரைக் கைது செய்யவும் அவைமுன்ஆஜர் படுத்த அரெஸ்ட் வாரண்ட் அனுப்பப் படும் என்று தெரிவித்தார்.

அதேசமயம் இப் பத்திரிகையின் ஆசிரியர் அனில் தாக்கர் இக்குறிப்பிட்டகட்டுரை வெளியான சமயம்தான் ஆசிரியராக கடமையாற்றவில்லை எனத் தெரிவித்திருப்பதால் இனி மேல் இத்தகைய கட்டுரைகள் வெளியிடப்படலாகாது எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது எனவும் அவைத்தலைவர்தெரிவித்தார்.

முரசொலிப் பத்திரிகைபேரவைக் குறிப்பேட்டிலிருந்து நீக்கப்பட்ட பகுதிகளைப் பிரசுரித்தமைக்காக அதன் ஆசிரியரை அவைக்கு வரவழைத்து கூண்டிலேற்றிக் கண்டிப்பது எனவும் சட்டப்பேரவை தீர்மானித்தது.

இதே போல பேரவையில் நடக்காத ஒரு நிகழ்ச்சியை நடந்ததாக பிரசுரித்தமைக்காக கோவை மாலைமுரசு பத்திரிகையின் ஆசிரியரையும் அவைக்கு வரவழைத்து கண்டிப்பதெனவும் சட்டப்பேரவை தீர்மானித்துள்ளது.

## இன்றைய போட்டிகள்

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் பதினொரு பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வலிகாமம் மேற்குப் பிரிவின் கழகங்களுக்கிடையிலான போட்டியில் இன்று தெல்லிப்பளை கிறாஸ் கொப்பர்ஸ் அணியை எதிர்த்து அளவெட்டி விநாயகர் அணி மோதவுள்ளது. சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இப்போட்டி நடைபெறவுள்ளது.

வடமராட்சி பிரிவின் கழகங்களுக்கிடையிலான மற்றொரு போட்டியில் வதிரி டயமண்ட்ஸ் அணியை எதிர்த்து அல்வாய் மனோகரா அணி மோதவுள்ளது. இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இப்போட்டி நடைபெறவுள்ளது.

## உதவிப்பணம்

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோர்க்குரிய 1992 தை,மாசி மாதங்களுக்கான கொடுப்பனவு தற்போது யாழ். அடைக்கலமாதா கோவிலுக்கு அருகில் உள்ள ஊர்காவற்றுறை கிராம சேவையாளர்களின் பணிமனையில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றது. (22)

# விண்வெளி தொழில் நுட்பங்களை இந்தியா பெற அமெரிக்கா தடை

## ரஷ்சியா மீது அழுத்தம்

அமெரிக்காவின் எதிர்ப்பையடுத்து இந்தியாவுக்கு விண்வெளித் தொழில் நுட்பத்தை வழங்க ரஷ்சிய அதிபர் பொறிஸ் யெல்சின் மறுத்து விட்டதாக இந்திய பத்திரிகைகள் செய்திவெளியிட்டுள்ளன.

அமெரிக்காவின் இந்தச் செயலை இந்திய மக்களவையைச் சேர்ந்த எல்லாக்கட்சி உறுப்பினர்களும் கண்டித்துள்ளனர். அமெரிக்காவின் இந்த ஆதிக்கப் போக்கை ஒன்று திரண்டு எதிர்க்க வேண்டும் என மூன்றாம் உலக நாடுகளை இந்த உறுப்பினர்கள் கேட்டுள்ளனர்.

அணு ஆயுதப் பரவல் ஒப்பந்தத்தில் இந்தியாகையொப்பமிட மறுத்துவருவதற்கும் அமெரிக்காவின் ரஷ்சியா மீதான இந்த நிர்ப்பந்தத்திற்கும் நிச்சயமாக தொடர்பு இருப்பதாக இந்திய மக்களவை உறுப்பினர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இந்தச் செய்தியை இந்திய அரசாங்கம் மறுத்துள்ளது,

இதேவேளை ரஷ்சிய அரசின் அவசர அழைப்பையடுத்து இந்திய விண்வெளித் துறையின் செயலாளர் வி. ஆர். ராவ் தலைமையில் இந்திய நிபுணர்கள் குழுவொன்று மொஸ்கோ சென்றுள்ளதுஎனவும்,

விண்வெளி ஆய்வுத்துறையின் தொழில் நுட்பங்களை இந்தியாவிற்கு வழங்குவதற்கான புதிய ஏற்பாடுகளை உருவாக்குவதற்காக இந்த அவசர அழைப்பை ரஷ்யா விடுத்துள்ளதாகவும் இந்திய வெளியுறவு அதிகாரி தெரிவித்தார்.

## அதிபர்களுக்கான அவசர கூட்டம்

பாடசாலை மாணவ மதிய உணவு முத்திரை வழங்கல், இலவசபாடப்புத்தகங்கள் கொத்தணி ரீதியாக வழங்கத் தேவையான விபரம், 5ஆம் ஆண்டு புலமைப் பரீட்சைக்கான மேற்பார்வை சம்பந்தமாகவும், அடுத்த தவணை ஆரம்பம் பற்றியும் கலந்துரையாடுவதற்கு கொத்தணி அதிபர்களையும், பாடசாலை அதிபர்களையும், தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தினர் (22-4-92) புதன் கிழமை மு.ப. 9-30 மணிக்கு யா/றிபேக் கல்லூரி மண்டபத்திற்கும், மருதனார்மடக் கல்விக்கோட்டத்தினரை (22-4-92) புதன் கிழமை பி.ப. 01-00 மணிக்கு யா/இராமநாதன் கல்லூரி மண்டபத்திற்கும், பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தினரை (23-4-92) வியாழக் கிழமை மு.ப. 10-00 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்திற்கும் தவறாது சமுகம் தரும் வண்ணம் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

## கொடுப்பனவுகள்

பலாலி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர்களையும், ஆசிரிய மாணவர்களையும் சித்திரை மாதச் சம்பளத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நாளை மு.ப. 9.00மணிக்கு பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைக்கும் வரும் வெள்ளிக்கிழமை மு.ப 9.00 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கும் தவறாது சமுகம் தரும்படி அதிபர்கள் கேட்டுள்ளனர்.

## புகையிரதத்தில் சிக்கி இளைஞர் மரணம்

வவுனியா புகையிரத நிலையத்தில் யாழ் வாசியொருவர் புகையிரதத்தில்சிக்கிமரணமானார். நல்லூரைச் சேர்ந்த

# மே தின ஏற்பாடுகள் தீவிரம் புதிய தீர்மானங்கள் அமுல்

(யாழ்ப்பாணம்)

தொழிலாளர் தினமான மே தினத்தை அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. மே தின ஏற்பாட்டுக் கூட்டுக்குழு இதற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதில் தீவிரமாக இறங்கியுள்ளது.

இக்குழுவின் விசேட கூட்டம் ஒன்று நேற்று விடுதலை புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றபோது மேதின ஏற்பாடுகள் தொடர்பான சில நடைமுறைத் திட்டங்கள் குறித்து சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கிறது.

இத் தீர்மானங்களின்படிமே தினத்தில் பங்கு கொள்ளும் ஊர்திகள் அனைத்தும் எமது போராட்ட உணர்வை, போராட்டத்தின் ஊடாக விளையும் சமுதாய மாற்றத்தை வெளிப்படுத்துவதாகவும், பெண் அடக்கு முறை சாதிக் கொடுமை, எமது கலாசாரச் சீரழிவு, சிறிலங்கா இராணுவத்தின் கொடுமை, ஆகியவற்றை சித்தரிப்பதாகவும், இவற்றுக்கு போராளிகளும் மக்களும் முகம் கொடுத்து வெற்றி பெறுவதையும் மற்றும் மாணவர் எழுச்சியையும் எமது தேசிய வளங்களைக் கொண்டு சுய சார்பு பொருளாதாரத்தை வளர்த்தெடுக்கும் ஆற்றலையும், உற்பத்தியை மேம்படுத்தலையும், உழைக்கும் மக்கள் அரசியல் மயப்படுத்தலையும், மாவீரர்களுக்கு உழைக்கும் மக்களது அஞ்சலிகள் செலுத்தப்படுவதையும் சித்தரிப்பதாக அமைய வேண்டும்.

அத்துடன் மக்கள் மத்தியில் இருந்து போராளிகள், துணைப்படை வீரர்கள், தொண்டர் படையினர், உருவாகுவதை, தேசிய வளங்கள் மற்றும் சுற்றாடல், சுகாதாரம் பாதுகாக்கப் படுவதையும் கிராமிய மேம்பாட்டுத் திட்டங்கள் நடைமுறைப் படுத்துவதையும் மேற்படி ஊர்திகள் சித்தரிப்பவைகளாகவும் மேதின தயாரிப்புக்கள் அனைத்தும் மேற்படி விடயங்களை அடியொற்றி முன்னெடுக்கப்பட்டவைகளாகவும் அமைதல் வேண்டும் எனவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கிறது.

## கடற்படையின்

பருத்தித்துறை, வியாபாரி மூலை ஓராம் கட்டையைச் சேர்ந்த உமாபதி சிவராசா (வயது 50) என்பவரே அச் சம்பவத்தின் போது பலியானார்.

இவர் மீன்பிடிக்கச் சென்ற பிளாஸ்ரிக் படகு, வெளியி

## நிலைமை

## தியாகி அன்னைபூபதி இறுதி நாள் நிகழ்ச்சிகள்

# மரண அறிவித்தல்கள்

## திரு.வினாசித்தம்பி இராசரத்தினம்

வினாசித்தம்பி இராசரத்தினம் 20-04-92 இல் காலமாகிவிட்டார். இவர் தொண்டமானாறைப் பிறப்பிடமாகக்கொண்டவரும், சுதுமலை வாசியும், சுருட்டுத் தொழில் அதிபருமாவார். இவர் புவனேஸ்வரியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற புஸ்பராணி, செல்வராணி, இராஜகோபால (சவூதி அரேபியா), இரட்ணகோபால் (சவூதி அரேபியா), ரேவதி (பிரான்ஸ்) விஜயகோபால் (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும்,

இரட்ணராஜா (விவசாயப் பகுதி), ஜெபசாந்தகுமாரி, பாமாதேவி, இராஜசிங்கம் (பிரான்ஸ) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (21.4.92) செவ்வாய் (இன்று) பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. புவனேஸ்வரி
(மனைவி)

4ஆம், கட்டை
ஆனைக்கோட்டை (2488)

## சரவணமுத்து தாமோதரம்
(இளைப்பாறிய அதிபர்)

மஞ்சந்தோட்டம், கரவெட்டி மேற்கைச் சேர்ந்த சரவணமுத்து தாமோதரம் (இளைப்பாறிய அதிபர்) கொழும்பில் காலமானார். இவர் காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும், செல்வசுந்தரம் (சுவீடன்), இராஜகுலேந்திரன் (பிரான்ஸ்), ஜெயரத்தினம் (சுவீடன்), இராஜயோகம் (ஆசிரியை, கிளிநொச்சி), மாலதி (ஆசிரியை, பெரியதம்பனை) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவஞானம் (புகையிரத நிலைய அதிபர், கிளிநொச்சி), மாதவன் (ஆசிரியர், பெரியதம்பனை), கிருஷ்ணமாலா, செல்வரா ஆகியோரின் மாமனாருமாவார். இவ்வறிவித்தல் உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

பிளாஸ்ரிக் படகு, வெளியி ணைப்பு இயந்திரம் ஆகியன துப்பாக்கிச் சூட்டினால் சேத மடைந்த நிலையில் பின்பு மீட்கப்பட்டன.

இவரது சடலம் கடலில் மிதந்து கொண்டிருந்தபோது கண்டெடுக்கப்பட்டது.

இவருடன் மீன்பிடிக்கச் சென்ற க. அன்னலிங்கம் என்ற குடும்பஸ்தர் கடலில் நீந்தி வந்து, மற்ற மீனவர்க ளின் உதவியுடன் கரை சேர்ந்தார்.

கரை திரும்பாதவர்களின் உறவினர்களான பெண்கள், ஆண்கள், சிறுவர்கள் ஆகி யோர் கடற்கரையில் குழுமி நின்று கடலையே பார்த்த வண்ணம் ஏக்கத்துடன் நின்ற தைக் காணக்கூடியதாக இருந் தது.

பருத்தித்துறை முனை என் னுமிடத்திலிருந்து கடலில் மீன்பிடிக்கச் சென்றவர்களே கரை திரும்பாதவர்கள்.

குடத்தனை, அம்பன், நாகர்கோவில் பகுதியிலுள்ள மக்கள் நேற்று அதிகாலை கடலில் வெடிச் சத்தங்கள் கேட்டதாக கூறினார்கள்.

## நிலைமை

இவ்வாறு நோர்வேயின் கூட்டு அபிவிருத்தி அமைச் சர் திருமதி கிறேரி போர்பே கூறியுள்ளார். சிறிலங்காவில் மனித உரிமைகள் மீறப்படும் விவகாரங்களில் தொடர்ந்து ஆர்வம்காட்டி வரும் இவர் சிறிலங்கா அரசு இவ்விடயத் தில் நல்ல முன்னேற்றத்தைக் காட்டாதுவிட்டால் நோர்வே வழங்கும் உதவிகள் வெட் டப்படுவது பற்றிப் பரிசீலிக் கப்படும் என எச்சரித்துள் ளார்.

'ஐவன்ட்' பத்திரிகையின் நோர்வேயிலுள்ள பத்திரிகை யாளருக்கு அளித்த பேட்டி யில் அவர் மேலும் கூறுகை யில், இந்த விவகாரத்தை சிறிலங்கா அரசு உரியவகை யில் அணுகாது விட்டால் உத வித் தொகைகளை குறைப் பது மட்டும்தான் நாம் செய்ய முடியும் என்பதல்ல. மேலும் பல வழிவகைகள் உண்டு. இந்த நிலைமைகள் இப்படியே கையாளப்படுவதற்கான பொறுப்பில் நாமும் பங்கேற்க முடியாது எனவும் தெரிவித் தார்.

# இறுதி நாள் நிகழ்ச்சிகள்

பூநகரி முழங்காவில் பிர தேசத்தில் இறுதி நாள் நிகழ் ச்சி நேற் முன்தினம் தேரவில் இந்து தமிழ்க்கலவன் பாட சாலையில் பாடசாலை அதிபர் திரு. சிவசாமி அவர்கள் தலை மையில் நடைபெற்றது காலை 8.00 மணிமுதல் பி.ப 4 00 மணிவரையும் உண்ணாவிரத மும் 7.30 மணிக்கு நினைவு பேருரையும் நடைபெற்றது. இதில் பூநகரி முளங்காவில் பிரதேச அ.நி. பொறுப்பாளர் திரு.பா.சௌந்தர், மன்னார்

மாவட்ட ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் ராம்ராஜ் மன் னார் மாவட்ட மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் ஜோஜ்.பூந கரி முழங்காவில் மகளிர் முன் னணி பொறுப்பாளர் செல்வி வினோதா ஆகியோரும் மற் றும் ஆசிரியர்களும் உரையாற் றினர். பின்னர் கலை நிகழ்ச் சிகளான நாடகம் நாட்டிய நாடகம் என்பன இடம்பெற் றன.

## பெற்றுக் கொள்ளவும்

மருதப்பு இராசலிங்கம் என் பவரது ஆட்களைப்பதிவுசெய் யும் ஆளடையாள பத்திரப் பற்றுச்சீட்டு(இல. H 605736) கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக் கப்பட்டுள்ளது உரியவர்கள் எமது காரியாலயத்தில் பெற் றுக்கொள்ளவும்.

## மீனவர்களை

கடந்த புத்தாண்டு தினத் திற்குமுன் இவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள்என எதிர் பார்க்கப்பட்டபோதிலும் கூட்டுப்படைத் தலைமையகம் இன்றுவரை விடுதலை செய்வ தற்கான சாத்தியக்கூறுகள் எதுவும் தென்படாததனா லேயே அரச அதிபர் மேற் கண்டவாறு தந்தியை அனுப்பி வைத்துள்ளனர். (ச)

## பெண்புலிகளின்

ர்த் தாக்குதல்கள் இராணு வத்தின் சக்தியை சிதறடிப்ப தாக உள்ளதாகவும், சிறி லங்கா இராணுவ அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளார்.

இதனால், நோக்கத்தில்தெளி வும், மனவுறுதியும் புலிகளுக்கு எதிரான போரில் அவசியம் என்று இளம் அதிகாரிகளுக்கு போர் முனையில் உள்ள உயர் அதிகாரிகள் போதித்து வருவ தாகவும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

## விடுதலைப்புலிகள்

விபுசான சித்துகே, சிலாபம் பௌத்த இளைஞர் சங்கச் செயலாளர் வலிமுனி ஜெய ரட்ன டீ சில்வா ஆகியோர் செயற்படுவர்.

புதன்கிழமை மாலை விமா னமூலம் பலாலி வரும் பௌத்த குருமார்கள் சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கத் தினருடன் அங்கிருநது காங் கேசன்துறை, சேந்தான்குளம் வீதியூடாக அன்றிரவே யாழ்ப் பாணம் வரவுள்ளனர். இப் பிக்குகளுக்கான தங்குமிட வசதி யாழ். சுபாஸ் விடுதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

26 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரை யாழ்ப்பாணத் தில்தங்கியிருக்கும் இவர்களின் பாதுகாப்பு ஏற்பாடுகளை விடு தலைப் புலிகள் மேற்கொள் வார்கள்.

இக்காலப் பகுதியில் விடுத லைப் புலிகளுக்கும், பௌத்த பிக்குகளுக்குமிடையில் மூன்று கட்டங்களாகப் பேச்சுவார்த் தைகள் இடம்பெறலாமெனத் தெரிய வருகிறது. இப்பேச்சு வார்த்தையின்போது விடுத லைப் புலிகளின் பிரதிநிதிகள் தமிழ் மக்கள் அனுபவித்து வரும் பல்வேறு நெருக்கடிகள் பற்றியும், விடுதலைப் புலிக ளின் அரசியல் நிலைப்பாடு பற்றியும் விளக்குவார்களென தெரிய வருகிறது.

னார். நல்லூரைச் சேர்ந்த மயில்வாகனம் ரங்கநாதன் என் பவரே இவ்வாறு பலியானவ ராவார்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது, யாழ்ப்பாணத் தில் புத்தாண்டை கழித்து விட்டு கொழும்பு செல்லும் போது வவுனியாவில் புகையிர தத்தில் ஏற முயன்றபோது தவறி விழுந்து இவர் மரணம டைந்துள்ளார். [75]

## செயலகத்தில்

ஒன்று யாழ் செயலகத்தில் இன்றுநடைபெறஉள்ளது.

யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் தலைமையில் காலை 10 மணிக்கு ஆரம்பமாக உள்ள இக்கூட்டத்தில் இவ் வாண்டு நடைமுறைப்படுத்தப் பட உள்ள திட்டங்கள் சமர்ப் பிக்கப் பட்டு அவை ஆராயப் பட்டபின்அங்கிகரிக் கப்படஉள் ளன. (ச)

## கடற்புலி

டம் மாமுனையில் நாளை மாலை 7 00 மணிக்கு நடை பெறவுள்ளது.

இக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பி னர்கள் கலந்துகொண்டு உரை யாற்றுவார்கள். (36)

## தெரிவுக்குழு

தரப்பினரும் உணர்ந்துள்ள னர் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது என்றார்.

பாராளுமன்ற தெரிவுக்குழு இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை முன் வைக்க வேண்டும் என்பதில் சகல அரசியல் கட்சி களாலும் ஆர்வம் காட்டப் பட்டு வரும் அதே வேளையில் வடக்கு-கிழக்கு இணைப்பு குறித்தும் இணக்கம் காண முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

வடக்கு -கிழக்கு நிரந்தர இணைப்பு இல்லாமல் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்பதால் இணை ப்பு தவிர்க்க முடியாதது என தமிழ் இயக்கங்கள்வலியுறுத்தி வருகின்றன என்றும்தொண்ட மான் தனது பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

மஞ்சந் தோட்டம்,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

தகவல் :
கி. பாலேந்திரன்
[2486]

## செல்லக்கண்டு சின்னத்துரை

கொட்டைக்காடு, வட்டுக்கோட்டையை பிறப்பிட மாகக் கொண்ட V.C. செல்லக்கண்டு சின்னத்துரை காலமாகிவிட்டார். அன்னார் குமார் ரெக்ஸ் முத்தி ரைச்சந்தி நல்லூர், யோகாஸ் புடைவை அகம் (பெரிய கடை) உரிமையாளரின் மாமனாரும், செல்லம்மாவின் அன்புக் கணவரும், ரஞ்சிதமலர், யோகேஸ்வரி, அற் புதலிங்கம், ஆனந்தலிங்கம், இரத்தினமாலா ஆகியோரின் அன்புத்தந்தையும், பத்மகுமாரன் இந்திர ராசாவின் மாமனாரும், விஜிதரன், விஸ்ணுவர்த்தன், வேணுகரன், ரமேஸ்குமார், தினேஸ்குமார் ஆகியோ ரின் அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 21 - 04 92 (இன்று) செவ்வாய்க்கிழமை நடைபெற்று பூதவுடல் 2.30மணி யளவில் தகனக்கிரியைக்காக வட்டுக்கோட்டை மயா னத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும் படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :
யோகாஸ் புடைவை அகம்
உரிமையாளர்
[2487]

A/L 94 23-4-92 காலை 9.00மணி
தாவரவியல்
ஐங்கரநேசன்
யூனிவேர்சல்
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.
(சி/4293)

க.பொ.த சாதாரணதரம்
O/L
பகல்முழுநேரவகுப்பு
யூனிவேர்சல்
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக் கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.